# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093635

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 18/2019 Date: நாள் 09.10.2019

2. (i) Act சட்டம்: Indian Penal Code Sections பிரிவுகள்: 120(b),409,420,465,

(ii) Act சட்டம்: Indian Penal Code Sections பிரிவுகள்: 468,471,477(A)

(iii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c) & (d)

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 01.05.2017 Date to : நாள் வரை 31.12.2017

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.09.2019 Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — சென்னை ஊ.த.க. துறை இயக்குநரக குறிப்பாணை எண்.78/2018/AGRI/VPM, நாள் 20.09.2019

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 500 மீட்டர் வடக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மாவட்ட விற்பனை குழு அலுவலகம், விழுப்புரம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் --------------

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் E.S.J.மெல்வின் ராஜசிங் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர், ஊ.த.க.பிரிவு, கடலூர், I/C விழுப்புரம். (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, விழுப்புரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

பணிநியமன அதிகாரியின் முன் அனுமதி பெறவேண்டி இருந்ததால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

9/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
E.S.J. மெல்வின் ராஜாசிங்,
காவல் துணை கண்காணிப்பாளர்
Name: பெயர் ......கடலூர்,......
Rank: நிலை ......................No. எண் ..........
I/C விழுப்புரம்.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

__எதிரிகள்:__

1. திரு.S.ராமச்சந்திரன்,
வயது 55/2019,
த/பெ.செங்கேணி,
செயலாளர்,
விழுப்புரம் விற்பனை குழு,
விழுப்புரம் மாவட்டம்.

2. திரு.மு.சுந்தரமூர்த்தி,
வயது 52/2019,
த/பெ.வே.முத்தையன்,
மேற்பார்வையாளர்,
விழுப்புரம் விற்பனை குழு,
விழுப்புரம் மாவட்டம்.

3. திரு.ஆ.செந்தில்முருகன்,
வயது 39/2019,
த/பெ.ஆதித்தன்,
விற்பனைக்கூட
கண்காணிப்பாளார்,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,
உளுந்தூர்பேட்டை &
திருநாவலூர் (பொறுப்பு),
விழுப்புரம் மாவட்டம்.

4. திரு.C.அசோக்,
வயது 55/2019,
த/பெ.அ.சின்னதுரை நாடார்,
விற்பனைக்கூட
மேற்பார்வையாளர்,
கண்காணிப்பாளர்
(முழு கூடுதல் பொறுப்பு),
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,
திருக்கோவிலூர்,
விழுப்புரம் மாவட்டம்.

__சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்குகள்), விழுப்புரம், முன்பாக சமர்ப்பிக்கப்படுகிறது.__

விழுப்புரம் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை குழுவில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர் அவர்களின் கடிதம் Letter No. 48/AA8/2018-2, Dated:02.03.2018 ன்படி உரிய விசாரணை மேற்கொள்ள இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, ஊ.த.க துறை இயக்குநர் அவர்களின் குறிப்பாணை எண் 78/2018/AGRI/VPM ன்படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் மூலம் முதல் நிலை விசாரணை செய்யப்பட்டது. அத்தகைய முதல்நிலை விசாரணையில் தெரியவந்த செய்திகள் பின்வருமாறு :

கு.அ-1. திரு.S.ராமச்சந்திரன், செயலாளர், ஒழுங்குமுறை விற்பனை குழு, விழுப்புரம், கு.அ-2.திரு.மு.சுந்தரமூர்த்தி, மேற்பார்வையாளர், ஒழுங்குமுறை விற்பனை குழு, விழுப்புரம், கு.அ-3. திரு. ஆ.செந்தில்முருகன், கண்காணிப்பாளர், ஒழுங்கு முறை விற்பனை கூடம், உளுந்தூர்பேட்டை & திருநாவலூர் (பொறுப்பு), கு.அ-4. திரு. சி.அசோக், கண்காணிப்பாளர் சங்கராபுரம், கு.அ-5. திரு.வே.காசிநாதன், மேற்பார்வையாளர், கண்காணிப்பாளர் (முழு கூடுதல் பொறுப்பு), திருக்கோவிலூர், கு.அ-6.து.லட்சுமணன், கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைகூடம், விழுப்புரம், கு.அ-7. திருமதி. R.இந்திராணி, மேற்பார்வையாளர், ஒழுங்குமுறை விற்பனைகூடம், செஞ்சி, கு.அ-8. திரு.S.லட்சுமிபதி, மேற்பார்வையாளர், ஒழுங்குமுறை விற்பனைகூடம், விக்கிரவாண்டி, கு.அ-9.திரு.கா.சரவணன், கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைகூடம், அவலூர்பேட்டை, கு.அ-10. திருமதி. A.கலைச்செல்வி, கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனை கூடம், கள்ளக்குறிச்சி மற்றும் சின்னசேலம் (கூடுதல்

| | |
|---|---|
| 5. திரு.காசிநாதன்,<br>வயது 56/2019,<br>த/பெ.வேலன்,<br>விற்பனைக்கூட<br>மேற்பார்வையாளர்,<br>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,<br>திருக்கோவிலூர்,<br>விழுப்புரம் மாவட்டம்.<br><br>6. திரு.து.லட்சுமணன்,<br>வயது 38/2019,<br>த/பெ.துரைசாமி,<br>விற்பனைகூடகண்காணிப்பாளர்,<br>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,<br>விழுப்புரம் மாவட்டம்.<br><br>7. திருமதி.R.இந்திராணி,<br>வயது 51/2019,<br>க/பெ.ரவி,<br>மேற்பார்வையாளர்,<br>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,<br>செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்.<br><br>8. திரு.S.லட்மிபதி,<br>வயது 50/2019,<br>த/பெ.சிவப்பிரகாசம்,<br>மேற்பார்வையாளர்,<br>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,<br>விக்கிரவாண்டி,<br>விழுப்புரம் மாவட்டம்.<br><br>9. திரு.கா.சரவணன்,<br>வயது 41/2019,<br>த/பெ.M.காளி,<br>விற்பனைகூடகண்காணிப்பாளர்,<br>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,<br>அவலூர்பேட்டை,<br>மேல்மலையனூர் தாலுக்கா, | பொறுப்பு), கு.அ-11. திரு. P.N.ரவி, கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனை கூடம், மரக்காணம் மற்றும் வளத்தி மற்றும் கு.அ-12. திருமதி.R.பிரதீபா, கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனை கூடம், தியாகதுருகம் (கூடுதல் பொறுப்பு) ஆகியோர் சம்பவகாலமான 01.05.2017 முதல் 31.01.2018 வரையில் விழுப்புரம் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை குழு நிர்வாகத்தின் கீழ் பணிபுரிந்துள்ளனர். மேற்சொன்ன குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு 2(c) ன்படி சம்பவ சமயத்தில் பொது ஊழியர்கள் ஆவர்.<br>மேலும், விசாரணையில் கடந்த 01.05.2017 முதல் 31.12.2017 வரை விழுப்புரம் விற்பனை குழு செயலாளர் திரு.எஸ்.ராமச்சந்திரன் என்பவர் ரூ.75,54,222/-க்கு சில்லரை செலவினங்களுக்காக மொத்தம் 1,482 காசோலைகள் வழங்கியுள்ளார். மேலும் அரசின் வரவு செலவு திட்டத்தின்படி 2017-18ம் ஆண்டிற்கான சில்லரை செலவின தலைப்பு கணக்கிற்கு ரூ.10,10,000/- மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் விற்பனை குழுவின் செயலாளர் 2017-18 ஆண்டில் மட்டும் செய்யப்பட்ட சில்லரை செலவினங்களுக்காக கோரப்பட்ட தொகையாக ரூ.75,54,222/- என காசோலைகள் என காண்பித்துள்ளார்.<br>மேற்படி செலவினங்களில் அதிகப்படியான தொகை கோரப்பட்ட செலவினங்ளாக டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக ஜேசிபி இயந்திரங்கள் பயன்படுத்துதல், மரங்கள் கழித்தல், களை எடுத்தல், முட்புதர்கள் அகற்றம் செய்தல், மணல் மற்றும் கிராவல் கொண்டு இடங்களை சமப்படுத்துதல், மின்சாதன பொருட்கள் சீர் செய்தல், குடிநீர் குழாய்கள் அமைத்தல், வர்ணம் பூசுதல், கிடங்குகளை சுத்தம் செய்தல், குடிநீர் தேக்கத்தொட்டிகள் கட்டுதல், அலுவலக அறைகளுக்கு பூட்டு வாங்கியது, சால்வைகள் வாங்கியது மற்றும் இதர சிறு செலவீனங்கள் செய்துள்ளதாக காட்டியுள்ளார்.மேற்படி சில்லரை |

| | |
|---|---|
| 10. திருமதி.A.கலைச்செல்வி,<br>வயது 44/2019,<br>க/பெ.இளங்கோவன்,<br>விற்பனைகூட<br>கண்காணிப்பாளர்,<br>கள்ளக்குறிச்சி &<br>சின்னசேலம் (கூடுதல்<br>பொறுப்பு), ஒழுங்குமுறை<br>விற்பனைக்கூடம்,<br>விழுப்புரம் மாவட்டம்.<br><br>11. திரு.P.N.ரவி,<br>வயது 52/2019,<br>த/பெ.P.V.நடராஜன்,<br>விற்பனைகூட<br>கண்காணிப்பாளர் (பொறுப்பு),<br>மரக்காணம்& வளத்தி,<br>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,<br>விழுப்புரம் மாவட்டம்.<br><br>12. திருமதி.R.பிரதீபா,<br>வயது 39/2019,<br>க/பெ.கமல்ஹாசன்,<br>கண்காணிப்பாளர்,<br>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,<br>தியாகதுருகம் (முழு கூடுதல்<br>பொறுப்பு),<br>விழுப்புரம் மாவட்டம். | செலவீனங்களுக்காக கொடுக்கப்பட்ட விலை பட்டியல்கள் கணினி உதவியுடன் கலர் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டவைகளாகவும், பெரும்பான்மையான விலைப்பட்டியல்கள் பொய்யானதாகவும் மற்றும் செய்யப்பட்ட ஒரே வேலைக்காக பல விலைப்பட்டியல்களையும் அந்த விலைப் பட்டியல்களின் வரிசை எண் தொடர்ச்சியாக இல்லாமல் முன்னுக்கு பின் முரணாக உள்ளது. மேலும், விழுப்புரம் விற்பனைக் குழுவின் கணக்கு பதிவேடில் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மட்டும் செய்யப்பட்ட சில்லரை செலவீனங்களுக்காக காட்டப்பட்ட தொகை ரூபாய் 9,27,914/-. எனவே மொத்தம் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முடிய ரூபாய்.84,82,136/- அளவிற்கு முறைகேடாக செலவினம் காட்டப்பட்டுள்ளது.<br>இந்த விசாரணையில் விழுப்புரம் விற்பனை குழுவின் செயலாளர் திரு.எஸ்.ராமச்சந்திரன் என்பவரால் வழங்கப்பட்ட காசோலைகள் குறித்தும் மற்றும் குற்ற அலுவலகர்கள் திரு.செந்தில் முருகன், திரு.அசோக், திரு.வி.காசிநாதன், திரு. து.லட்சுமணன், திருமதி. ஆர்.இந்திராணி, திரு. எஸ்.லட்சுமிபதி, திரு. கா.சரவணன், திருமதி. எ.கலைச்செல்வி, திரு.பி.என்.ரவி, திருமதி. ஆர்.பிரதீபா ஆகிய ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர்களால் சமர்பிக்கப்பட்ட சில்லரை செலவினங்களுக்கான பட்டியல்களின் உண்மைத்தன்மை மற்றும் பட்டியல்களை ஆய்வு செய்ததில் மேற்படி சில்லரை |

செலவினங்களுக்ககான பட்டியல்கள் அனைத்தும் போலியானவை என்றும் பல நிகழ்வுகளில் வேறொரு நிறுவனத்தின் பெயரை போலியாக விலைப்பட்டியல் தயாரித்து குற்ற அலுவலகர்களி கூட்டு சேர்ந்து சதி திட்டம் தீட்டி அரசாங்கத்தை ஏமாற்றி சுய லபாம் பெறும் நோக்கத்துடன் அரசு பணம் ரூ.84,82,136/-ஐ கையாடல் செய்துள்ளனர் என தெரியவருகிறது.மேலும், விசாரணையில் திரு.செந்தில் முருகன், திரு.அசோக், திரு.வி.காசிநாதன், திரு.து.லட்சுமணன், திருமதி.ஆர்.இந்திராணி, திரு.எஸ்.லட்சுமிபதி, திரு.கா.சரவணன், திருமதி. எ.கலைச்செல்வி, திரு.பி.என்.ரவி, திருமதி. ஆர்.பிரதீபா ஆகியோர் மேற்படி காலகட்டத்தில் தாங்கள் பணிபுரிந்த

ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் சில்லரை செலவினங்களான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்று காண்பித்து மேற்படிபணிகளுக்கான விலைப்பட்டியல்கள் விழுப்புரம் குழுவின் செயலாளர் திரு.எஸ்.ராமச்சந்திரன் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் செலவின பட்டியல்கள் பொய்யாக தாங்களே தயார் செய்து அவற்றை உண்மையான ஆவணங்கள் போல் தயாரித்து செயலாளர் மூலமாக காசோலை பெற்றுள்ளனர். மேற்படி 1 முதல் 12 வரையிலான குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்கள் கூட்டாக சேர்ந்து சதிதிட்டம் தீட்டி சில்லரை செலவின தலைப்பில் நடைபெறாத வேலைகளை நடைபெற்றதாக பொய்யான கணக்கெழுதி, இல்லாத நிறுவனத்தின் பெயரில் பொய்யான ரசீது தயார் செய்து போலியாக விலை பட்டியல் சமர்ப்பித்து தனது பொது ஊழியர் என்ற அதிகாரத்தை பயன்படுத்தி, சுயலாபம் பெறும் நோக்கத்தோடு அரசை ஏமாற்றும் நோக்குடன் பொய்யான ஆவணங்கள் உருவாக்கி அவற்றை உண்மையான ஆவணங்கள் இல்லை என்று தெரிந்தும் அவற்றை உண்மையான ஆவணங்களாக பயன்படுத்தி அரசு பணம் ரூபாய் 84,82,136/- அளவிற்கு கையாடல் செய்துள்ளார்கள் என்பது முன்விசாரணையில் தெரியவருகிறது. மார்ஜினில் கண்ட குற்ற அலுவலர்கள் 1 முதல் 12 வரையிலான நபர்கள் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள, பணி நியமன அதிகாரியின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி குற்ற அலுவலர்கள் மீது பிரிவு 120-B, 409,420,465,468,471,477-A இ.த.ச மற்றும் பிரிவு 13(2) r/w 13(1) (C) & (d), of The PC Act, 1988 ன் கீழ் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண் No.PE 78/2018/AGRI/VPM, Dated: 20.09.2019 ன்படி இன்று 09.10.2019 தேதி 17.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், பணி நியமன அதிகாரியின் முன் அனுமதி கடித நகல் ஆகியவை சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்குகள்), விழுப்புரம் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின் கோப்பில் வைக்கப்பட்டது.

9/6/19

(E.S.J.மெல்வின் ராஜசிங்)
காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கடலூர், i/c விழுப்புரம்.